தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை

SPRPTA

வெற்றிடங்கள்

தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையில் வெற்றிடம் உள்ள கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக குறித்த தகைமைகளை பூர்த்தி செய்துள்ள இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது) சேவைத் தரம்,

- முகாமைத்துவ உதவியாளர் தரம் III (தொழில்நுட்பம் அல்லாதது) (MA 1-1)
- நிலையப் பொறுப்பாளர் தரம் III (தொழில்நுட்பம் அல்லாதது) (MA 1-1)
- நடமாடும் பரிசோதகர் தரம் III (தொழில்நுட்பம் அல்லாதது) (MA 1-1)

➢ **தகைமைகள்**

I. க.பொ.த. சா/தர பரீட்சையில் சிங்களம்/ தமிழ், கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரண்டு முறைகளுக்கு மேற்படாத தடவைகளில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

II. க.பொ.த. உ/தர பரீட்சையில் குறைந்தது 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். (சாதாரண பொதுப் பரீட்சை தவிர)

➢ **மேலதிக தகைமைகள்:**

I. ஆங்கில மொழி தொடர்பில் அறிவு

II. கணினி பயன்பாடு தொடர்பில் அறிவு மற்றும் அது தொடர்பில் தொழில்முறை தகைமை இருத்தல்.

➢ **வயது:** 18 வயதுக்கு குறையாத, 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

➢ **சம்பள அளவு:** 2025.03.25 ஆம் திகதிய 01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைய பதவிக்கு உரிய சம்பள அளவு ரூபா 46,220-10*540-7*630-4*890-20*1190 = 83,390/=

➢ **வேறு கொடுப்பனவுகள்:** அரசின் மூலம் பதவிக்கு தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு மற்றும் நன்மைகள் உரித்தாகும்.

➢ **ஆட்சேர்ப்பு முறை:** நியமன அதிகாரியினால் நியமிக்கப்பட்ட சபை ஒன்றினால் மேற்கொள்ளப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

➢ பொது நிபந்தனைகள் (அனைத்து பதவிகளுக்காகவும்):

அனைத்து விண்ணப்பதாரர்களும்,

1. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்கு வழங்கப்படும் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு மற்றும் தென் மாகாணத்தின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு தேவையான உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
3. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்களினால் தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் கீழ் பணி புரியும் முழுமையான காலத்தில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

➢ விண்ணப்பங்கள் – விண்ணப்பதாரர்கள் தங்களது தகைமைகள், அனுபவம் மற்றும் ஏனைய தொடர்புடைய தனிப்பட்ட விபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து, பதிவுத் தபால் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களின் நிழல் பிரதிகளையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் மீது விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். அரசாங்கம் / அரச கூட்டுத்தாபனங்கள் / சட்டரீதியான சபைகளில் பணியாற்றுபவர்கள் தமது நிறுவனத் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

➢ விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி – வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு 2026.11.20 அன்று அல்லது அதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.

தலைவர்,
தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை
இலக்கம் 67, லேன்பான் வீதி,
கோட்டை, காலி
தொ.பே : 0912234237 / 2227073-74

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED